நம்முடைய concentration இருக்கவேண்டும் என்பதற்காக, tuna மீன்கள் பிடிக்கப்படுவதன்மூலம், மீனவர்களினுடைய வாழ்வாதாரம் பெருகும் என்ற அடிப்படையிலே, இந்தியாவிலே 50 சதவீதம் subsidy, யாருமே கொடுக்காத நிலையில், ரூ.60 இலட்சம் ஒரு படகு வாங்குவதற்கு என்று சொன்னால், 30 இலட்சம் ரூபாயை subsidy-ஆகக் கொடுத்த ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 171 படகுகள் இன்றைக்குத் தயாராகி இருக்கின்றன. எனவே, நம்முடைய மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்று சொன்னால், ஆழ்கடலில் இருக்கின்ற மீன்கள் எல்லாம் இப்போது வயதாகி இறந்துகொண்டிருக்கின்றன. எனவே, நாம் அதைப் பிடிக்கவேண்டும். நாம் அதைப் பிடிப்பதன்மூலம் அந்நியச் செலாவணி ஏற்றம்பெறுவதோடு, மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்ற நிலையைத் தெரிவித்து, நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நலத் திட்டங்களுக்காக மட்டும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.258 கோடி செலவு செய்திருக்கிறார்கள், அடிப்படைக் கட்டமைப்பிற்கு என்று ரூ.278 கோடி அளவிற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள். எந்த ஒரு ஆட்சியிலும் செய்யாத ஒரு சாதனையாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கிய தொகை இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

68—

மகளிர் கலைக் கல்லூரி

***1190—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் சட்டமன்றத் தொகுதி சுமார் இரண்டரை இலட்சம் வாக்காளர்களைக் கொண்டது. இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும், ஒரு பேரூராட்சியையும், 48 ஊராட்சிகளையும் கொண்டது. கரந்தமலை, அழகர்மலை, சிறுமலை ஆகிய மலைகளை உள்ளடக்கியது நத்தம் சட்டமன்றத் தொகுதியாகும்.

1977 ஆம் ஆண்டு நத்தம் தொகுதி உருவாக்கப்பட்டது. இந்தத் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழே மிகவும் பின்தங்கிய மக்கள் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இத்தொகுதியில் மாணவியர்கள் அரசு கல்லூரிக்குச் செல்லவேண்டுமானால், மதுரை மீனாட்சி அரசு மகளிர் கல்லூரிக்கும், திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரிக்கும்தான் செல்ல வேண்டும். சுமார் 50 கி.மீ. தூரம் பயணம் செய்யவேண்டும். இதில் ஆடவர்களுக்கென்று இருப்பது மேலூர் அரசுக் கல்லூரி மட்டும்தான். இதுவும் 50 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. அடுத்து, பழனி, பழனியாண்டவர் ஆண்கள் அரசுக் கல்லூரி 100 கி.மீ. தொலைவில் உள்ளது. நத்தம் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 20 அரசு மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றிலிருந்து ஆண்டுதோறும் ஏறத்தாழ நான்காயிரம் மாணவ, மாணவியர்கள் 12 ஆம் வகுப்பு முடித்து, கல்லூரிக்குச் செல்கிறார்கள். இவர்கள் அருகில் உள்ள தனியார் கல்லூரிகளிலோ அல்லது திண்டுக்கல், மதுரை மற்றும் பழனி போன்ற ஊர்களுக்குச் சென்றுதான் கல்லூரிப் படிப்பினை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் 10-25

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: நத்தம் தொகுதி மக்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கின்றனர். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாணவ மாணவியர் தனியார் கல்லூரியில் அதிகக் கட்டணம் செலுத்தி படிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால், ஏராளமான மாணவ, மாணவியர் தமது படிப்பினை பன்னிரெண்டாம் வகுப்புடனே முடிக்கவேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, ஏழையெளிய மாணவியர் பயன்பெறும் வகையில், நத்தம் சட்டமன்றத் தொகுதியில் பெண்கள் பயிலும் வகையில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், ஏற்கெனவே இரண்டு அரசு மகளிர் கலைக் கல்லூரிகள், மூன்று அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மற்றும் பதினைந்து சுயநிதிக் கலைக் கல்லூரிகள் என மொத்தம் 21 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல்லில் எம்.வி.எம். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும், நிலக்கோட்டையில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றும் என, இரண்டு அரசு மகளிர் கல்லூரிகளும், இத்துடன், திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அரசு உதவிபெறும் கல்லூரியான அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் சுயநிதிக் கல்லூரிகளான இரண்டு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் ஐந்து மகளிருக்கான கல்லூரிகள் திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த மாணவியரின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அமைந்திருக்கின்றன.

2016 ஆகஸ்ட் 16]

இதில், கடந்த 2015-2016 மற்றும் 2016-2017 கல்வியாண்டிலே பார்க்கின்றபோது, அந்தக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களுக்குத் தேவையான மாணவிகள் இடங்கள் பூர்த்தியாகாமல், அவ்விடங்கள் காலியாக இருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், 2012-2013 ஆம் ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அக்கல்லூரிக்கான புதிய கட்டடப் பணியானது இன்றைக்கு நிறைவுபெறுகின்ற வகையிலேயும் அமைந்திருக்கிறது. அந்தக் கல்லூரியிலும் மாணவ, மாணவியருடைய சேர்க்கை சதவிகிதத்தைப் பார்க்கின்றபோது, குறைவாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற நத்தம் தொகுதி அமைந்திருக்கின்ற அந்த மாவட்டத்தில், இன்றைக்கு உயர் கல்விப் பெறக்கூடிய சூழ்நிலையில், மகளிருக்கென்று ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளிலே தேவையான இடங்கள் இருக்கின்ற காரணத்தினால், புதிதாக ஒரு கல்லூரியைத் தொடங்குகின்ற வாய்ப்பானது குறைவாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதியில் அரசின் சார்பாக எந்தவிதமான அரசுக் கல்லூரியோ, அரசு உதவிபெறும் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ எதுவுமில்லை. அங்குள்ள மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள்; பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளனர். வருகின்ற காலங்களில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கும்பட்சத்தில், நத்தம் சட்டமன்றத் தொகுதியில் இருபாலரும் படிக்கின்ற வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை முன்னுரிமை கொடுத்து தொடங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மாணாக்கர்களுடைய உயர் கல்வியைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, பல்வேறு புதிய கல்லூரிகள் எல்லாம் தொடங்கியதன் காரணமாக, இன்றையதினம் நம்முடைய மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கணக்கெடுப்பின்படி பார்க்கின்றபோது, மாணவியருடைய சேர்க்கை சதவிகிதமானது இந்திய அளவில் 22.7 சதவிகிதமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற இந்தத் தமிழகத்திலே மாணவியருடைய சேர்க்கை சதவிகிதம் 42.7 சதவிகிதத்தை இன்றைக்கு எட்டியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாணவியருடைய சேர்க்கை சதவிகிதத்தைப் பார்க்கின்றபோது, இந்திய அளவிலே தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. எந்தெந்த இடத்தில் எது தேவையோ, தேவைப்படுகின்றபட்சத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வு செய்து, கண்டிப்பாகத் தேவைப்படுகின்ற பகுதியிலே புதிதாகத் தேவைப்படுகின்ற கல்லூரிகளை ஏற்படுத்துகின்ற வாய்ப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பிற மாநில மக்கள் போற்றும்வகையில், தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்திவரும் தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தியூர் சட்டமன்றத் தொகுதியானது, விவசாயக் கூலிகள், பாமர மக்கள் மற்றும் மலைவாழ் மக்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இப்பகுதியில் அரசுக் கல்லூரி இல்லாததால், குறிப்பாக பர்கூர் மலைப் பகுதிகளிலிருந்து மாணாக்கர், கல்லூரிப் படிப்புக்குச் செல்ல, சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் உள்ள ஈரோடு பகுதிக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் போக்குவரத்து மற்றும் காலநேர*

அசௌகர்யங்கள் ஏற்படுகின்றன. எனவே, பாமர மற்றும் மலைவாழ் மக்களின், மாணாக்கர்களின் கல்வி நலனைக் கருதி, அந்தியூர் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை அமைத்துத் தந்திட ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற ஈரோடு மாவட்டத்தில், ஏற்கெனவே 5 அரசு உதவி பெறும் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றபட்சத்திலும்கூட, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் அந்த மாவட்டத்தினுடைய தேவைகளை அறிந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று என இரண்டு புதிய கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேவேளையில், ஒரு அரசு பாலிடெக்னிக் கல்லூரியையும் தொடங்கி, அந்த மாவட்ட மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தை உயர்த்துகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் செயல்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே கல்லூரி புதிதாகத் தேவைப்படுகின்றபட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, அதை ஆய்வு செய்யும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் அதிக அளவில் பெண்கள் கல்லூரிக்குச் செல்ல விரும்புகின்றார்கள். அப்பெண்களில் பெரும்பான்மையானோர் பீடி சுற்றும் கூலித் தொழிலாளர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், அதிக அளவில் விழிப்புணர்வுள்ள பெண்கள். அவர்களிடம் பேசும்போது,*

[2016 ஆகஸ்ட் 16

"என்ன படிக்கிறீர்கள்?" என்று கேட்டால், "Degree முடித்துவிட்டு, Bank exam அல்லது TNPSC Group-I, Group-II அல்லது மத்திய அரசு சார்ந்த Railway, Postal துறை exams போன்றவற்றை நாங்கள் எழுத விரும்புகிறோம்" எனக் கூறுகிறார்கள். அதற்கேற்றவகையில், ஒரு Science and Commerce கல்லூரி அமைத்துத் தர வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவியல் சம்பந்தப்பட்ட, Physics, Bio-Physics, Chemistry, Bio-Chemistry, Biology, Microbiology போன்ற சிறப்பு அறிவியல் பாடப் பிரிவுகளைக் கொண்டும், வணிகத் துறை சம்பந்தப்பட்ட Commerce, Maths, Business Maths, Economics துறை சார்ந்த புதிய பாடப் பிரிவுகளைக் கொண்டும், மகளிர் மேம்பாட்டிற்கு உதவும் வகையில், பெண்களுக்கான ஒரு சிறப்பு Science and Commerce கல்லூரியைக் கொண்டுவர முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011-2016 ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற பகுதியில் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேவேளையில், அந்தப் பகுதியில் ஏற்கெனவே, 2 அரசுக் கல்லூரிகளும், 11 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. அப்படி இருக்கின்றபட்சத்திலே, அங்கே புதிய கல்லூரிகள் தொடங்கத் தேவை எழவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய பாடப் பிரிவுகள் குறித்து கேட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 959 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்வாயிலாக அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் எந்தப் பிரிவில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று நினைக்கின்றார்களோ, அந்தப் பாடப் பிரிவிலே சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். அதனடிப்படையிலேதான், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு மாணவியர்களுடைய சேர்க்கை சதவிகிதத்தில் இந்திய அளவிலேயே தமிழகம் முதலிடத்தில்*

2016 ஆகஸ்ட் 16]

இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

திரு. கோ. லோகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அன்பின் திருவுருவமாய், அறிவின் சிகரமாய், ஆற்றலின் உறைவிடமாய், இயக்கத்தின் இதயமாய், ஈகையின் வடிவமாய், பண்பின் புகலிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், உமையாள், திருமகள் இவர்களின் மொத்த உருவமாய் நாடுபோற்றும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது வினாவினைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில், ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்திலே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது மூன்றும், அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது ஏழும் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றபட்சத்தில், அந்த மாவட்ட மக்களுடைய தேவைகளைக் கண்டறிந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணாக்கர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப அரசுக் கல்லூரியானது இன்றைக்குப் போதுமானதாக இருக்கிறது. மேலும், வரும் காலக்கட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே மாணாக்கர்களுடைய சேர்க்கை எண்ணிக்கை கூடுதலாகின்றபட்சத்திலே, தேவையை அறிந்து, மாண்புமிகு அம்மா*

அவர்களுடைய அரசானது முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே அமைந்திருக்கிற அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 13 இளநிலைப் பாடப் பிரிவுகளும், 7 முதுநிலைப் பாடப் பிரிவுகளும் இடம்பெற்றுள்ளன. அந்தக் கல்லூரியிலே ஏறத்தாழ 3,100 மாணவிகள் பயின்று கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிக்கென பல அத்தியாவசியத் தேவைகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிக்கென வகுப்பறைகள், நூலகம், ஆய்வுக்கூடங்கள், ஆய்வரங்கம், கலையரங்கம், சிற்றுண்டிச் சாலை, இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் என பல்வேறு தேவைகள் இருப்பினும், அந்தக் கல்லூரிக்கு அடிப்படையாக நான்கு வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடத்தை அரசு கட்டித்தர முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்கெனவே கட்டப்பட்ட கல்லூரிகளுக்கெல்லாம் தேவைப்படுகின்ற கட்டமைப்புகளை உருவாக்கித் தருவதற்காகவும், அந்தக் கல்லூரிகளில் மாணவ, மாணவியரின் நலன் கருதி ஆய்வுக்கூடத்திற்குத் தேவைப்படுகின்ற பல்வேறுவகையான பொருட்களை வாங்கி வழங்குவதற்காகவும் கடந்த ஆட்சிக் காலத்திலே 100 கோடி ரூபாயை ஒரே நேரத்தில் ஒதுக்கித் தந்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே கல்லூரிகளுக்குத் தேவையானவற்றை எல்லாம் இன்றைக்குப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றவேளையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கல்லூரிக்கு ஏதேனும் தேவைப்படுகின்றபட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு அதை எடுத்துச் சென்று, அந்தக்*

2016 ஆகஸ்ட் 16]

கல்லூரியினுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் நகரம், ஒரு தலைநகரமாக விளங்கிக் கொண்டிருந்தாலும், இதுவரையிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அங்கே இல்லை. 4½ இலட்சம் மக்கள் வசிக்கக்கூடிய அந்தத் தொகுதியில் தனியார் கல்லூரி மட்டுமே இருக்கக்கூடிய சூழலில் ஏழையெளிய குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள் பயிலக்கூடிய வகையில், அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், அது மிகுந்த மகிழ்ச்சியையும், வளர்ச்சியையும் அளிக்கும். எனவே, அரசு இதனை கவனத்தில்கொண்டு, அங்கே ஓர் அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய காஞ்சிபுரம் மாவட்டத்திலே அரசுக் கல்லூரி ஒன்றும், அரசு உதவி பெறுகின்ற 8 கல்லூரிகளும் ஏற்கெனவே செயல்பட்டாலும்கூட, கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியையும் அந்த மாவட்டத்திலே புதிதாகத் தோற்றுவித்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ஒரு கல்லூரியானது தேவைப்படுகின்றபட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு அதை எடுத்துச் சென்று, கல்லூரி அங்கு அவசியம் தேவைப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***730 திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தியத் திருநாட்டின் 70-வது சுதந்திர தின விழாவை ஒட்டி, தாய்த் திருநாட்டின் தலைமைச் செயலகக் கோட்டை முகப்பிலே தேசியக் கொடியைத் தன் பொற்கரங்களால் ஏற்றிவைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிட சூளுரை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய, நல் வழிகாட்டுதலின்படி, மக்கள் சேவை ஆற்றி வருகின்ற பழம்பெருமை வாய்ந்த வருவாய்த் துறையில், தினந்தோறும், தினந்தோறும் புதுமைகள் பல புகுத்தி, புத்துயிர் அளித்து, புதிய நிருவாகப் புரட்சி நிகழ்த்திக் காட்டப்பட்டு வருகிறது. இன்றைக்கு வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தி வருகின்ற இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்திற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'நல் ஆளுமை விருதினை' தனது பொற்கரங்களால் எனக்கு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறைக்கு மாபெரும் பெருமை சேர்த்திட்ட, வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழினம்காத்து நிற்கின்ற தமிழர் குலச் சாமி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய